# திருஞானசம்பந்தர் பாடல்களில் பஞ்சபூதங்கள்

**சு.மலர்**
தமிழ்த்துறை, முனைவர்பட்ட ஆய்வாளர்
திரு.வி.க. அரசு கல்லூரி
திருவாரூர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழியானது, தெய்வத்தமிழ் என்று அழைக்கப்படுகிறது. உலகின் மிகப்பெரிய பொருள் இறைவன். அந்த இறைவனைப் பாடுபொருளாகக்கொண்டு எழுந்த சைவநெறிப் பாடல்கள் பெரியபுராணம் என்னும் தொகுப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. எளிய தமிழில் பண்ணார்ந்த இசைநயத்துடன் நாயன்மார்கள் வடித்த அருந்தமிழ்ப் பாடல்கள் சமயத் தமிழுலகின் ஒப்பற்ற கருவூலமாகத்திகழ்கின்றன.

உலகில் தொண்டுநெறியும் சைவநெறியும் தழைக்கவேண்டி பரம்பொருளாகிய சிவபெருமான்மீது அடியார்கள் காட்டிய அன்பும் அருள்பாலித்த நிலையும் பல்லுயிரும் உணர்ந்து ஓதற்குரியதாக அமைந்ததே திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டத் தொகை என்பனவாம். இவற்றின் பின்னணியில் முகிழ்த்ததே பெரியபுராணம் ஆகும். பெரியபுராணம் என்னும் இலக்கியக் கடலுள் பலவிதப் பொருண்மைகள் பொதிந்துள்ளன. மனிதஉள்ளத்திற்கு இன்பம் தருகின்ற புதுப் புதுப்பொருண்மைகள் கிடைக்கின்றன. இப்புதுப் பொருண்மைக்கு அடித்தளமாக இருக்கிற பிரபஞ்சத்தில் நிலவியலின் கூறே முதன்மையாகிறது. இயற்கையின் கட்டமைப்பை மதுரை காஞ்சி,

**‘நீரு நிலனுந் தீயும் வளிய**
**மாசு விசும்போ டைந்துட னியற்றிய**
**மழுவா ணெடியோன்” - (மதுரை காஞ்சி ப.113)**

என விளக்கம் தருகிறது. இத்தகைய இயற்கையின் படைப்புகளுள் மனிதன் முதன்மையானவனாகிறான். மனிதனின் இன்பம், துன்பம், உணர்ச்சி மோதல்கள், சிந்தனைக் குழப்பங்கள் ஆகியனவும், இவை சார்ந்தக் கலவையே வாழ்க்கையாகும். வாழ்க்கையை இலக்கியமாகப் படைக்க முற்பட்டனர். உண்மையில் இலக்கியம் என்பது மனிதனுடைய எண்ணங்கள், அவனுடைய ஒட்டுமொத்த வாழ்வியலின் தொகுப்பேயாகும்.

மனிதவாழ்வியலின் முக்கியக் கூறுகளுள் பக்தியே முதன்மையாகிறது. தமிழகத்தில் கி.பி 4ஆம் நூற்றாண்டு முதல் கிபி. 12 ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலம் பக்திஇயக்கக் காலமாகும். இக்காலத்தில்தான் தேவாரம், திருவாசகம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் தோன்றின. இவற்றோடு பெரிய புராணமும் தோன்றின. பக்தி இயக்கக் காலத்தில் தோன்றிய பக்திக்காவியம் கி.பி. 4 முதல் 9 வரை வாழ்ந்த சைவ நாயன்மார்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இயற்கையின் படைப்பில் நிலவியலும் வாழ்வியலும் மனிதனை எப்போதும்விட்டுப் பிரியாதவை. நிலவியலின் கூறுகளாகிய பஞ்சபூதங்களுள் மனிதனின் வாழ்வியல் உயர்ந்ததாகிறது. காலந்தோறும் வருகின்ற சமூகவியலுள் மனிதனை மகிழ்விப்பதோடு அவனை நன்னெறிப்படுத்தவும் தவறவில்லை இலக்கியப் படைப்புகள்.

வாழ்க்கையின் திறந்த புத்தகமே இலக்கியம். இவ்விலக்கியத்துள் மனிதனுக்கு 'அன்பு'' முக்கியமாகிறது. இவ்வன்பினை இறைவன்மேல் சார்த்திக்கூறும்போது மனிதன் இறைவனைச் சரணமாகப் பற்றும்நெறி எளியநெறியாகும். எல்லாம் இறைவனது செயல். தான் இறைவனுக்கு அடிமையாய் அவன் வசப்பட்டுநிற்கும் இயல்புடையோன் என்பதை உணர்ந்து அவனையே தஞ்சமாகப் போற்றி அவனது அருளால் உய்வடைதலே உன்னத நெறியாகும். அதுவே வாழ்வியல் பேறாகும்.

**பஞ்சபூதமும் நிலவியலும்**

மனிதசமூகம் 'இயற்கை'' என்னும் நிலவியல் கோட்பாட்டிலேயே தொடங்குகிறது. நிலவியலில் அடிப்படையாக உள்ள பஞ்சபூதங்களின் செயலாக்கமே உலக இயக்கம். பஞ்சபூதங்களின் இயக்கத்தில் மனிதனின் இயக்கமும் அடங்கும். மனிதனின் இயக்கத்தை இயற்கையாகவும் இறைநிலையாகவும் உணர்ந்த திருஞானசம்பந்தரின் பாடல் தலங்களுள் பஞ்சபூதத்தலங்கள் மனித வாழ்வியலை மெய்ப்பித்துக் காலந்தோறும் வருகின்ற சமூகவியலுக்குப் படிப்பினையாகவும் அமைகின்றது. மாணிக்கவாசகரும் உயிர்களின் பரிணாமக் கொள்கையைப்,

**'புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்**
**பல்விருச மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்**
**மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.'' (மணிவாசகர் சிவபுராணம் 26- 32)**

என்று விளக்கம் தருகிறார். இப்பொருண்மை பின்வருமாறு:

**பஞ்சபூதப் பொருண்மை**

| பஞ்ச பூதம் | சிவன் | மனிதன் | தலம் | வழிபட்டோர் |
|---|---|---|---|---|
| 1. நிலம் | மூலம் (உயிர்ப் பொருள்) | உடல் | திருவேகம்பம் (காஞ்சி), திருவாரூர் | பிரமன் வழிபட்டது<br>இறைவன் - ஏகாம்பரநாதர்<br>இறைவி -காமாட்சி யம்மை<br>தலவிருட்சம் - மாமரம் |
| 2. நீர் | உந்தி உயிர்ப் பொருள் | வாய் | திருவாணைக்கா | சிலந்தி, யானை வழிபட்டது<br>இறைவன் - ஜம்புகேஸ்வரர்<br>இறைவி- அகிலாண்டேசுவரி<br>தலவிருட்சம் - வெண்நாவல் மரம். |
| 3. காற்று | கழுத்து உயிர்ப் பொருள் காற்று | மூக்கு | திருக்காளத்தி | சிலந்தி, பாம்பு, யானை வழிபட்டது.<br>இறைவன் - காளத்திநாதர்<br>இறைவி - ஞானப்பூங்கோதை<br>தலவிருட்சம் - மகிழமரம் |
| 4. தீ | மணி பூரகம் உயிர்ப் பொருள் வெப்பம | கண் | திருவண்ணாமலை | நான்முகன், திருமால், சிவன்அடி காணாது நிற்றல் வழிபட்டது. அருணகிரி அவதரித்தது. இறைவன்-அருணாசலேசுவரர்<br>இறைவி-உண்ணாமுலையம்மை<br>தலவிருட்சம் - மகிழமரம் |
| 5. வான் | முக்தி உயிர் பொருள் சரணாகதி | செவி | திருச்சிற்றம்பலம் | சமயக்குரவர் நால்வரும் வழிபட்டது.<br>இறைவன் - நடராசர் இறைவி சிவகாமியம்மை<br>தலவிருட்சம் - ஆலமரம் |

திருஞானசம்பந்தர் தாம் பாடிய பஞ்சபூதத்தலங்களில் மனிதனின் முழு உருவத்தையும் சிவபெருமானின் உடல் இயக்கத்தையும் ஒருசேரக் காட்டுகின்ற நிலவியலின் அடிப்படையே என்பதில் ஐயமில்லை. நிலவியலின் இயக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பதும் புலனாகிறது. மேற்கண்ட அட்டவணையில் பஞ்சபூதமும் பஞ்சபூதத் தலமாக விளங்கும் சிவனின் நிலைப்பாடும் வழிபட்டோரின் நிலைப்பாடும் ஒருங்கே அமைவதை உணரமுடிகிறது. பஞ்சபூதத் தலங்களை வழிபட்டால் வழிபடுவோர்க்கு யாது கிடைக்கும்? ஏற்பட்ட இன்னல்களை எங்ஙனம் களைய முடியும்? என்பதற்கும் திருஞானசம்பந்தரின் பாடல்கள் மருந்தாக அமைகின்றன. சான்றாகச் சில பாடல்கள் வருமாறு.

**1. நிலமே உடல் - உயிர்ப் பொருள் மூலம்**

குறிப்பு - பாவம் நெருங்காது
தலம் - காஞ்சி - ஏகாம்பரநாதர்

**"மறையானை மாசிலாப்புண் சடைமல்கு வெண்**
**பிறையானைப் பெண்ணொடு ஆணாகிய பெம்மானை**
**இறையானை ஏர்கொள் கச்சித் திருவேகம்பத்து**
**உறைவானை யல்லது உள்காது எனது உள்ளமே"**

**2. நீர் - உயிர்ப்பொருள் - உணவு**

குறிப்பு - தேவர்களால் விரும்புவர்
தலம் - திருவானைக்கா - ஜம்புகேஸ்வரா்

**"மழையார்மிட றாமழு வாளுடையாய்**
**உழையார்கர வாஉமை யாள்கணவா**
**விழவாரும் வெணாவலின் மேவியஎம்**
**அழகாஎனும் ஆயிழையான் அவனே"**

**3. காற்று - உயிர்ப்பொருள் உயிர் வாழல்**

குறிப்பு - இறைவன் உலகில் வாழ்பவர்
தலம் - திருக்காளத்தி - காளத்திநாதர்

**"வானவர்கள் தானவர்கள் வாதைபட**
**வந்ததொரு மாகடல்விடம்**
**தானமுது செய்தருள் புரிந்தசிவன்**
**மேவுமலை தன்னை வினவில்**
**ஏனமிள மானிடனொடு கிள்ளைதின்ன**
**கொள்ளஎழி லார் கவணினால்**
**கானவர்தம் மாமகளிர் கனக மணி**
**விலகுகா ளத்தி மலையே"**

**4. தீ - உயிர்ப் பொருளக்கு வெப்பம் தேவை**

குறிப்பு - வானோர் வணங்கலும் திருவடி அடைதலும்
தலம் - திருவண்ணமாலை - அண்ணாமலையார்

**"உண்ணாமுலை உமையாளொடும்**
**உடனாகிய ஒருவன்**
**பெண்ணாகிய பெருமான் மலை**
**திருமா மணி திகழ**
**மண்ணார்ந்தன அருவித்திரள்**
**மழலைம் முழவு அதிரும்**
**அண்ணாமலை தொழுவார்வினை**
**வழுவாவண்ணம் அறுமே"**

**5. வானமே செவி - உயிர்ப்பொருள் சரணாகதி**

குறிப்பு - நல்ல தன்மை அடைதல் (வேறு பெறுதல்)

தலம் - திருத்தில்லை - சிதம்பரம்

**"கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாரமே**
**செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே**
**பற்றா நின்றாரைப் பற்றா பாவமே."**

**முடிவுரை**

உலகப்பொருண்மையில் சமுகவியல் முக்கியத்துவம் வாய்ந்தது. சமூகவியலில் இலக்கியம் மனிதவாழ்வியலைச் செம்மைப்படுத்தியது. மனிதவாழ்வியலுக்கு அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயன் என்னும் கொள்கையில் பக்தி இலக்கியம் தனித்தன்மை பெற்றுள்ளது. பக்தி இலக்கியங்களில் பாடுபொருளான பக்தி உணர்ச்சியை இயக்கமாக்கி, இலக்கியமான தேவாரப் பாசுரங்களுள் திருஞான சம்பந்தர் பாசுரங்கள் சிவன் இயக்கத்தையும் மனித இயக்கத்தையும் பஞ்சபூதங்களாகவே கொண்டுள்ளன என்பதை எண்ணிப்பார்க்கின் உலக இயற்கையே சிவனின் இயக்கமாகும். இதைத்தான் மாணிக்கவாசகர், **"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்"** என்று நிரூபணம் செய்துள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. திருமுருகன், ப. சம்பந்தர் தேவாரம்.
2. பரமசிவம், சொ. பெரியபுராணம் காட்டும் பண்பாடு, பட்டு பதிப்பகம், சென்னை.
3. மணவாளன், அ.அ. தமிழ் பக்தி இயக்கம் சாகித்திய அகாதெமி.
4. ஞானசம்பந்தம், அ.ச. தேவாராத் திருப்பதிகங்கள், கங்கை புத்தக நிலையம், சென்னை.